# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2024

## பேச்சு 2013 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள்

வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவரர்கள்.

## நட்பு

நட்பு என்பது நம்மை அறியாமல் நமக்குள் ஊடுருவும் பேரின்பம்; ஒன்றுபட்ட எண்ணங்களால் ஏற்படும் ஓர் உறவு. இனம், மதம், மொழி, நாடு வேறுபாடின்றி உயர்விலும், தாழ்விலும், இன்பத்திலும், துன்பத்திலும் இரண்டறக் கலப்பதே உண்மையான நட்பு. நல்ல நட்பு என்பது நாம் சொல்லாமலே நல்ல உணர்வுகளுடன் கலந்து நிற்பது.

" முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பதே நட்பு "

ஒருவரைப் பார்த்து நாம் புன்னகைப்பது மட்டும் நட்பல்ல, அந்தப் புன்னகை அவரது துன்பத்தைப் போக்கிவிடும் மருந்தாகவும் அமைய வேண்டும், என்கிறார் வள்ளுவப்பெருந்தகை. நண்பர்கள் நாம் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, நம்மைத் திருத்துபவர்களாக இருத்தல் வேண்டும்.

நாம் நல்ல நட்பைத் தேடும்முன் ஒருவர் நம் நட்புக்குத் தகுதியானவரா என்பதை ஆராய வேண்டும். நல்லவரோடு நாம் நட்புக் கொண்டால், அவர்களின் நல்லறிவு நம்மை நல்வழிப்படுத்தும். பண்பில் சிறந்தோரிடம் நாம் கொள்ளும் நட்பு வளர்பிறை போல் நாள்தோறும் வளரும், முழுமை பெறும். பண்பற்றவர்களிடத்து கொள்கின்ற நட்பு, தேய்பிறைபோல் மெல்ல மெல்லத் தேய்ந்து, இருளில் தள்ளி விடும்.

«அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்» என்பது பழமொழி.

ஆபத்தான நேரங்களில் நண்பனைக் கைவிடாது, தேவையான உதவி புரிவதே சிறந்த நட்பிற்கு அடையாளமாகும்.

நல்ல நூல்களை நாம் பயிலும் போது மனதுக்கு மகிழ்ச்சியும், நற்பயனும் கிடைப்பது போல், நல்ல நண்பர்களுடன் பழகும் போது நம் வாழ்வு சிறக்கும், இனிக்கும்.

சிறந்த நண்பர்களைத் துணையாக்கி, இனிதே வாழ்வோம்!

நன்றி - வணக்கம்

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.

அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.

மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.